**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | STC No.264/2017 | Date | : | 07.01.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா.** 5 | Taluk | : | |
| Name | : | **பாலாஜி** | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.01.2026

(1 மற்றும் 2ம் எதிரிகள் ஆஜர். 3 மற்றும் 4ம் எதிரிகள் ஆஜர் இல்லை, 3 மற்றும் 4ம் எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் காளிங்கராயன் பாளையத்தில் குடியிருந்து காட்டன் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளான அஞ்சலிதேவி, பிரபு ஆகியோரை எனக்கு தெரியும். மற்றொரு எதிரிகான பிரகாஷ், சேகர் (எ) ஞானசேகரன் ஆகியோரை எனக்கு தெரியும். எனக்கு சொந்தமான குடோன் கவுந்தப்பாடி ரோட்டில் உள்ள பெரியார் நகரில் உள்ளது. அதை பிரகாஷ் என்பவர் வாடகைக்கு பிடித்து டபுளிங் நூல்தொழில் செய்து வந்தார். நிறைய பேரிடம் பிரகாஷ் கடன் வாங்கி இருந்தார். எனக்கும் சரியாக வாடகை தராமல் இருந்து வந்தார். அதனால் சரியாக தொழிலை நடத்த முடியாமல் மூடிவிட்டார்.

2. கடன் கொடுத்த அன்பழகன், கலைமணி என்பவரும் பிரகாஷின் கடனுக்கு ஈடாக டபுளிங் மிசினை விலைக்கு கேட்டு வந்தார்கள். அவரும் கொடுத்து விடுவதாக உறுதி அளித்து இருந்தார். இது நடந்து இரண்டு வருடங்களுக்கு பின்பு பிரகாஷ் நீதிமன்றத்தில் ஐபி மனு தாக்கல் செய்திருந்தார். அது சம்பந்தமான நோட்டீஸ் என்னுடைய குடோனுக்கு வந்திருந்தது. இரண்டு வருடங்கள் கழித்து தீர்ப்பு

ஆகிவிட்டது. அதில் கலைமணி என்பவர் குடோனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தீர்ப்பு வந்தது. அந்த நோட்டீசை என்னிடம் கொடுத்து குடோனை சுத்தம் செய்து கொள்வதாக கலைமணி என்னிடம் 28.06.2015 ஆம் தேதி சொன்னார்.

3. மறுநாள் குடோனை சுத்தம் செய்ய அன்பழகன், வரதராஜ், முத்துசாமி ஆகியோர் எனது குடோனிற்கு வந்து சுத்தம் செய்தார்கள். மாலை 04.30 மணி அளவில் அஞ்சலிதேவி, பிரபு, பிரகாசம் ஆகியோர் எனது குடோனிற்கு வந்து அங்கு சுத்தம் செய்து கொண்டிருந்த அன்பழகன் தரப்பினரிடம் எதற்கு இங்கு வந்து சுத்தம் செய்கிறீர்கள் என்று கேட்டதாகவும், அப்போது அவர்களிடையே வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும், ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதாகவும், அருகில் இருந்தவர்கள் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் அங்கு சென்று பார்த்த போது அதற்குள் இரு தரப்பினரும் சென்று விட்டார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.01.07 17:29:15 -0800

Judicial Magistrate No.III,

Erode.